செ.வெ.எண் : 55 /ஆகஸ்ட் நாள் : 29.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## "சபதம் மூலம் சாதிப்போம் - புதிய இந்தியா சிந்தனை (2017-2022)" குறித்த ஒரு நாள் கருத்தரங்கு

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (29.08.2017) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் ஒருங்கிணைந்து நடத்திய "சபதம் மூலம் சாதிப்போம் - புதிய இந்தியா சிந்தனை (2017-2022)" குறித்த ஒரு நாள் கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

கருத்தரங்கினைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

அன்னியர் ஆதிக்கத்திலிருந்த நம் தேசத்தின் விடுதலைக்காக, நமது விடுதலை இயக்க தலைவர்கள் 1942- ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு என்ற மாபெரும் இயக்கத்தை முன்னின்று நடத்தியதால் நம் இந்திய திருநாடு 1947-ல் விடுதலை பெற்றது. தற்போது வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, புதிய இந்தியா சிந்தனை (2017-2022) என்பதனை அடிப்படையாக கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்கழகம் சார்பாக சபதம் மூலம் சாதிப்போம் - புதிய இந்தியா சிந்தனை (2017-2022)" குறித்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு நாள் கருத்தரங்கு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. வேளாண்மைப் பணிகளில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயிகள் தங்களது வருமானத்தினை இரு மடங்காக உயர்த்திக் கொள்வதற்கான வழிவகை குறித்த ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை ஊக்குவிப்பதே இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

குறிப்பாக மழைநீர் சேமிப்பு, நுண்ணீர் பாசனம் போன்ற நீர் மேலாண்மை பயிற்சிகள், உயர் விளைச்சல் தரமான விதைகள் மற்றும் நாற்றுகள் பயன்படுத்துதல், வேளாண் உற்பத்தி பொருள்களை பாதுகாப்பான முறையில் சேமிப்பு கிடங்குகளில் முறையாக சேமித்தல், உணவுப் பதப்படுத்தும் முறைகள் மூலம் மதிப்பு கூட்டுதல், இணையதளம் மூலம் வேளாண் பொருள்களை சந்தைப்படுத்துதல், வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் பயிர் காப்பீடு, வேளாண் கடனுதவிகள் வழங்கி விவசாயிகள் நலனை பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விவசாயிகள் நல நடவடிக்கைகள் குறித்து அந்தந்த துறைகள் சார்ந்த உயர் அலுவலர்கள் மூலம் விவசாயிகள் எளிமையாக புரிந்து கொள்ள ஏதுவாக விளக்கம் அளிக்கப்படுகிறது. எனவே இக்கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள விவசாயிகள் இக்கருத்தரங்கினை முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் "சபதம் மூலம் சாதிப்போம் - புதிய இந்தியா சிந்தனை (2017-2022)" குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

இக்கருத்தரங்கில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அரிவாசன், வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சி.ராஜமாணிக்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.பெ.ராஜா, மீன்வளத்துறை துணை இயக்குநர் திரு.பா.ஐசக் ஜெயக்குமார், நபார்டு வங்கி மேலாளர் திரு.சி.மதியழகன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.சுரேஷ் பாபு, வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் திரு.த.அ.விஜயலிங்கம், உதவி பேராசிரியர் முனைவர்.ஜெ.ராம்குமார் உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**